IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.80/2019
Deposition of Witness for PW1.

Name : திரு.பத்மநாபபிள்ளை
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 15.09.2014 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ−1, பிரதிவாதி கையால் எழுதிதந்த ரசீது வா.சா−ஆ.2 ( வா.சா.ஆ−2 போலியானது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 04.11.2008 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ−3, 29.12.2014 தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் அஞ்சலக ரசீதுடன் கூடியது வா.சா−ஆ−4, புதிய புல எண்.103/11ன் வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ−5, புதிய புல எண்.124/5ன் வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ−6, பிரதிவாதி வழக்கறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ−7.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.